# இந்திய சுதந்திரப் போராட்ட வரலாறு

## 1857-ம் ஆண்டு பெரும் கலகம்

### காரணங்கள்

- சம்பள ஒழுங்கீட்டு முறை
- டல்ஹௌசி பிரபுவின் சுவீகாரம் இழக்கும் கோட்பாடு
- நாடுகளை இணைத்தல்
- இன வேறுபாடு
- நிலச்சட்டங்கள்
- ஆங்கிலேயர்கள் "சதி" அல்லது உடன்கட்டை ஏறுதல் என்ற பழக்கத்திற்கு சட்ட ரீதியில் தடை கொண்டு வந்து அம்முறையை ஒழித்தனர்.
- **உடனடிக் காரணம்: கொழுப்பு தடவிய துப்பாக்கித் தோட்டக்கள்தான்.**

### புரட்சியின் போக்கு:

- மே 10 1857-ம் ஆண்டு மீரட்டில் இருந்த படைவீரர்கள் வெளிப்படையாக கலகத்தில் ஈடுபட்டனர். மே 11ல் இக்காலப் படை திடீரென டில்லிக்கு விரைந்து சென்றது. அங்கு டில்லி அரண்மணையை கைப்பற்றி பகதூர்ஷாவை இந்தியப் பேரரசராக பிரகடனம் செய்தனர். பின்பு ஜான் நிக்கல்சன் டில்லியை திரும்பவும் கைப்பற்றினார்.
- பின்பு இக்கலகம் கான்பூர், அயோத்தி, குவாலியா மற்றும் வடகிழக்கு இந்தியா அதாவது கல்கத்தா வரை சென்றது.

### கலகத்தின் தன்மையும் முடிவும்

- 1857-ம் ஆண்டு கலகம் முன்கூட்டியே திட்டமிடப்படவில்லை.
- சில இடங்களை தவிர பொதுமக்களில் ஆதரவு கிடைக்கவில்லை.
- ஆங்கில அரசுக்கு சில மன்னர்களை ஆதரவு தெரிவித்தனர்.
- இது ஒரு தேசிய இயக்கமாக பரவவில்லை.
- ஆங்கில அரசின் அடக்குமுறை புரட்சியை வெகுவாக பாதித்தது.
- வங்காளத்தில் படையினர் பல இடங்களில் கிளர்ச்சி செய்தனர். எங்குமே பொதுமக்களின் ஆதரவு கிடைக்கவில்லை.

### விளைவு:

- ஐரோப்பிய படைவீரர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. பீரங்கி படை ஐரோப்பியரின் கீழ் கொண்டுவரப்பட்டது.
- 1858-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் விக்டோரிய மகாராணியார் பிரகடனபடி இந்தியா இங்கிலாந்தின் நேரடி ஆட்சியில் வந்தது என அறிவிக்கப்பட்டது.

### காங்கிரஸ் மகாசபை அமைப்பிற்கு முன்பு தோன்றிய அமைப்புகள்

- **வங்காள நிலச்சுவான்தார்கள் அமைப்பு**
  - 1853-ம் ஆண்டு நவம்பர் 12ம் நாள் ஆரம்பிக்கப்பட்டது.
  - இதன் கிளை இலண்டனில் துவாரகநாத தாகூரினால் ஆரம்பிக்கப்பட்டது.
- **வங்காள பிரிட்டிஷ் இந்திய சமூகம்**
  - 1843 ஏப்ரல் 20ம் நாள் வங்காள நிலச்சுவான்தார்கள் அமைப்போடு சேர்ந்து வங்காள பிரிட்டிஷ் இந்திய சமூகம் என்ற அமைப்பு உருவானது.
  - இந்த அமைப்பிற்கு **ஜார்ஜ் தாம்ப்ஸன்** என்ற ஆங்கிலேயர் தீவிரமாக பணியாற்றினார்.
- பின்பு வங்காள பிரிட்டிஷ் இந்திய சமூகம் கி.பி.1851ம் ஆண்டு பிரிட்டிஷ் இந்தியன் சங்கமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- சிசிர் குமார் கோஷ் என்பவர் வங்காளத்தில் 1875ம் ஆண்டு டிசம்பர் 23ம் நாள் இந்தியா லீக் - ஐ தோற்றுவித்தார்.
- சுரெந்திரநாத் பானர்ஜி, ஆனந்மோகன்போஸ் முயற்சியால் 1876ம் ஆண்டு ஜூலை 26ம் நாள்

DISTRICT EMPLOYMENT OFFICE VILLUPURAM

Downloaded from https://t.me/tnpscfree


https://t.me/tnpscfree
Join Telegram
Channel :
@tnpscfree
https://t.me/sasiclasses

கல்கத்தா ஆல்பர்ட் மண்டபத்தில் இந்தியா கான்பரன்ஸை தோற்றுவித்தார். இந்திய சிவில் பணிக்கான தேர்வு எழுதும் வயதை குறைக்கவும் இந்தியாவில் தேர்வை நடத்தவும் பெரிதும் பாடுபட்டது.

**பம்பாய்:**

- பம்பாய் கழகம் 1852ம் ஆண்டு ஆகஸ்டு 26ம் துவங்கப்பட்டது.
- இக்கழகத்தை முன்மாதிரியாக கொண்டு **பூனா சர்வஜனிக் சபை நீதிபதி ரானடே** முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது.
- தாதாபாய் நௌரோஜியின் முயற்சியால் **இலண்டனில் கிழக்கிந்திய சங்கம்** கி.பி.1866ம் ஆண்டு இந்தியாவை பற்றிய செய்தியை பிரிட்டிஷ் மக்களுக்கு அளிப்பதற்காக அமைக்கப்பட்டது.
- பம்பாய் ராஜதானிக்கழகம் 1885ம் ஆண்டு ஜனவரி 31ம் நாள் பக்ருதீன்தியாப்ஜி, பெரோஸ் - ஷா – மேத்தா அவர்களின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது.

**சென்னை :**

- வங்காள பிரிட்டிஷ் இந்தியக்கழகத்தின் கிளையாக துவக்கப்பட்ட சென்னை வாசிகள் சங்கம் 1852ம் ஆண்டு பிப்ரவரி 26ம் நாள் தனிச்சங்கமாக உதயம் ஆயிற்று.
- சென்னை மகாஜனசபை 1884 மே 16ம் நாள் ஆர். ரெங்கையாநாயுடுவை தலைவராகவும் எம். விஜியராகவாச்சாரியும், பி. ஆனந்தச்சார்லும் அதன் செயலர்களாவர்கள்.

| ஆண்டு | இடம் | தலைமை |
|---|---|---|
| 1885 | பம்பாய் | டபிள்யு. சி. பானர்ஜி |
| 1886 | கல்கத்தா | தாதாபாய் நௌரோஜ |
| 1887 | சென்னை | பக்ருதீன் தியாப்ஜி |
| 1888 | அலகாபாத் | ஜார்ஜ் யூலே |
| 1889 | கல்கத்தா | தாதாபாய் நௌரோஜி (மூன்று முறை காங்கிரசுக்கு தலைமை பொறுப்பேற்றவர்) |
| 1906 | சூரத் (காங்கிரஸ் பிளவு) | ராஷ்பிகாரி கோஷ் |
| 1916 | லகனோ (மிதவாதி-தீவிரவாதி இணைவு) | அம்பிகா சரண் மஜும்தார் |
| 1917 | கல்கத்தா | டாக்டர்.அன்னிபெசன்ட் முதல் பெண் காங்கிரஸ் தலைவி |
| 1922 | கயா (காங்கிரஸ் பிளவு-சுயராஜ்ய கட்சி தோற்றம்) | சி.ஆர்.தாஸ் |
| 1924 | பெல்காம் | மகாத்மா காந்தி |
| 1938 | ஹரிபுரா | சுபாஸ் சந்திரபோஸ் |
| 1939 | திரிபுரா (காந்தியின் ஆசிபெற்ற பட்டாபி சீத்தாராமய்யா) காங்கிரஸ் தலைமை தேர்தல் போட்டியில் தோல்வி – சுபாஸ் வெற்றிப்பெற்றார். | சுபாஸ் சந்திரபோஸ் |
| 1947 | மீரட் | ஜெ.பி. கிருபாலனி |
| 1950 | நாசிக் | புருசோத்தமன் தாஸ் டான்டன். |

DISTRICT EMPLOYMENT OFFICE VILLUPURAM



Downloaded from https://t.me/tnpscfree

## ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு எதிராக பயங்கரவாத இயக்கம்

- சுதந்திரப்போராட்ட இயக்கத்தில் பயங்கரவாத இயக்கங்களின் பங்கு மிகவும் முனைப்புடன் பணியாற்றியுள்ளது. இந்த அமைப்புகள் அன்னிய ஆட்சியை முடிவுக்கு கொண்டு வர வன்முறையின் மீது நம்பிக்கை கொண்டு செயல்பட்டனர்.

### மகாராஷ்டிரத்தில் இரகசிய இயக்கங்கள்

- 1897ஆம் ஆண்டு பூனாவைச் சார்ந்த தாமோதர் சபேகா. பாலகிருஷ்ண சபேகர் ஆகிய இரு சகோதரர்கள் பொது மக்களின் கசப்புக்குள்ளான இரு பிரிட்டிஷ் அதிகாரிகளை கொன்றிருந்தனர்.
- 1899ம் ஆண்டு இந்தியாவில் முதல் இரகசிய அமைப்பு **மித்ரா மேளா சவார்கர்** சகோதரர்களால் அமைக்கப்பட்டது.
- 1904ம் ஆண்டு **வி.டி. சவார்கர் நாசிக்கில் அபினவ பாரத்** என்ற அமைப்பின் இரகசிய கழகம் அமைத்தார்.
- இந்த அமைப்பின் உறுப்பினர் மதன்லால் டிங்கரா. இவர் இந்திய அரசு அதிகாரியான கர்சன் வில்லி என்பவரை இங்கிலாந்தில் 1909ஆம் ஆண்டு ஜுலை 1ம் நாள் சுட்டுக்கொன்றார்.

### வங்காளத்தில் இரகசிய இயக்கங்கள்:

- **அனுசீலன் சமிதி கல்கத்தாவில் பிரேந்திரகுமார் கோஷ், ஜடின்ந்திரநாத் பானர்ஜி, பிரமோத மித்ரா** ஆகியோரால் 1902ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.
- கிழக்கு வங்காளத்தில் டாக்கா **அனுசீலன் சமிதி புலிந்தாஸ்** என்பவரால் துவக்கப்பட்டது.
- அனுசீலன் சமிதயைச் சேர்ந்த குர்திராம் போஸ் மற்றும் பிர∴ப்ல்லா சாக்கியும் முசாப்பூர் ஆங்கில மஜிஸ்ட்ரேட் கிங்ஸ்போர்டு என்பவருக்கு பதிலாக கென்னடி என்பவரை சுட்டுக்கொன்றார்.
- பிர∴ப்ல்லாசாக்கி தன்னைத்தானே சுட்டுக்கொண்டு இறந்தார். குர்திராம்போஸ் தூக்கிலிடப்பட்டார்.
- இந்துஸ்தான் குடியரசு சங்கம் 1924ம் ஆண்டு அகில இந்திய அளவில் முதன் முதலில் சச்சின் சந்யால் ஜெகதிஸ்சந்திர சட்டர்ஜியால் நிறுவப்பட்டது.
- இந்த அமைப்பைச் சார்ந்தவர்கள் மீது இரயில் கொள்ளை வழக்காகிய காக்கோரி சதி வழக்கு தொடரப்பட்டது. ராம்பிரசாத் பிஸ்மில் ரோஷன்லால், அஷ்வக்குல்லா ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர்.
- பின்னர் 1928ஆம் ஆண்டு இந்த அமைப்பை சந்திரசேகர ஆசாத் இந்துஸ்தான் சோஷலிச குடியரசு கழகம் என்று பெயர் மாற்றம் செய்தார்.
- சைமன் கமிஷன் எதிர்ப்பு போராட்டத்தில் காவல்துறையால் தாக்கப்பட்டு **பஞ்சாப் சிங்கம் லாலா லஜபதிராய்** இறந்து (1928 அக்டோபர் 30நாள்) போனார். அதற்கு பழிவாங்கும் விதமாக இந்த அமைப்பை சேர்ந்த **பகத்சிங் ஆசாத், ராஜகுரு ஆகியோர் தடியடியை நடத்திய காவல் அதிகாரியான சவுன்டர் என்பவரை சுட்டிக் கொன்றனர்.**
- பகத்சிங், பி.கே. டத் ஆகிய இருவரும் மத்திய சட்டமன்றத்தில் பார்வையாளர் பகுதியில் இருந்து இரண்டு வெடிகுண்டை வீசினர். அவர்கள் கைது செய்யப்பட்டனர். 1931ஆம் ஆண்டு மார்ச் 23ம் பகத்சிங், சுக்தேவ் ராஜகுருவும் தூக்கில் இடப்பட்டனர்.
- இரகசியக் கைதிகளை மரியாதையாக நடத்தும் பொருட்டும், சிறையின் நிலையை மேம்படுத்தவும் ஜட்டின்தாஸ் என்பவர் 63 நாட்கள் உண்ணாவிரமிருந்து உயிர்நீத்தார்.
- வங்காளத்தில் **சூரியாசன் என்பவர் சிட்டகாங் ஆயுத கிடங்கில்** 1930ம் ஆண்டு ஏப்ரல் மாதம் புகுந்து ஆயுதங்களை எடுத்துக்கொண்டு மீதியை அழிக்கவும் செய்தார்.

### வெளிநாட்டில் பயங்கரவாதம்

DISTRICT EMPLOYMENT OFFICE VILLUPURAM



Downloaded from https://t.me/tnpscfree

- 1905 இலண்டனில் சயாம்ஜி கிருஷ்ணவர்மா இந்திய மாணவர்களுக்காக இந்தியா இல்லம் தொடங்கினார். இந்தியன் சமூகவியலர் என்ற இதழையும் நடத்தியது. 1907 ஆம் ஆண்டு இந்தியாஇல்லம் வி.டி. சர்வார்கரால் பொறுப்பேற்றுக்கொள்ளப்பட்டு நடத்தப்பட்டது.
- பாரிஸில் மேடம் காமாவும் பெர்லினில் வீரந்திரநாத் சட்டோப்யாயா இரகசிய கழகம் அமைத்து இயக்கினார்.
- 1913ஆம் ஆண்டு காதர் இயக்கம் சோகன்சிங் பாக்ராவும், லாலா ஹர்தயாள்ம் ஆகியோரால் யு.எஸ்.எ. மற்றும் கனடாவில் பசிபிக் கரையோரமாக ஆரம்பிக்கப்பட்டது. பெரும்பான்மையோர் சீக்கிய தோட்ட தொழிலாளர்களாவார்கள்.
- காதர் என்ற வாராந்திரியை உருது, மற்றும் குருமுகி மொழியிலும் முதலில் வெளியிட்டனர்.
- காமாகாடமாரு கப்பல் தாயகம் திரும்பியோர் பிரச்சனை காதர் கட்சியுடன் தொடர்புடையது.

### பயங்கரவாத இயக்கத்தினரின் முக்கிய செயல்கள்

- 1907ஆம் ஆண்டு வங்காளத்தில் துணை நிலை ஆளுநர் பெல்லரை கொல்ல முயற்சி செய்து தோல்வியடைந்தார்.
- தலைநகரை டெல்லிக்கு மாற்றும் நிகழ்ச்சியில் 1912ஆம் ஆண்டு டிசம்பர் 23ம் நாள் நடந்தது. அன்று ராஷ்பிகாரிபோஸ் இந்திய கவர்னர் ஜெனரல் ஹார்டிஞ் பிரபுவின் மீது டெல்லி நுழைவாயிலில் வெடிகுண்டை வீசினார்.
- ஜக்சன் நாசிக் குற்றவியல் நடுவர் சாவார்க்கரை தண்டித்ததால் 1909 ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

### முக்கிய தீவிரவாத இதழ்கள்

- யுகன்தார் பரிந்திரகுமார் கோஷ் பரிந்திரகுமார் டத் 1906ல் வங்காளத்தில் நிறுவினர்.
- சந்தயா 1906ல் பிரமோபந்தப் உபத்யா – வங்காளம்
- கல் - மகாராட்டிரா
- “வந்தே மாதரம்” மேடம் காமா, பாரிஸ்
- தல்வார் - வீரந்திரநாத் சட்டோபத்யாய், பெர்லின்
- காதர் - காதர் இயக்கம், சான்பிராசிஸ்கோ
- இந்துஸ்தான் விடுதலை – தாராகநாத் தாஸ், வென்குயர்

## காங்கிரஸின் ஆரம்ப காலகட்டம் (1885-1905)

### மிதவாதிகள் காலகட்டம்

- ஆங்கிலேய அரசுக்கும் நிர்வாகத்திற்கும் குந்தகம் ஏற்படாமல் இந்தியர்களின் பிரட்சனைகளை தீர்க்கவும், நிவாரணங்களைப் பெறவும், அதனை குறித்து விவாதம் செய்து அமைதியான வழியில் பெறும் நோக்கம் கொண்டோர்கள். தீர்மானங்களும் விண்ணப்பங்களும், சட்டரீதியான வழிமுறைகளும் அவர்களின் வழிவகையாக இருந்தது.

### மிதவாத தலைவர்கள்

- தாதாபாய் நௌரோஜி, எம்.ஜி. ரானடே, சுரேந்திரநாத் பானர்ஜி, ஃப்ரொசா மேத்தா, பக்ருதீன்தியாப்ஜி ஜி.கே. கோகுலே, டி. டபிள்யூ, பாச்சா, ஆனந்தமோகன் போஸ், ராஷ்பிகார் கோஷ் ஆகியோர் முக்கியமான தலைவர்களாவார்கள்.

### சாதனைகள்

- மக்களிடம் தேசிய உணர்வை வளர்த்து அரசியல் கல்வியை புகட்டினர்.
- ஜனநாயகம், தேசியம் கருத்துக்களை மக்களிடையே பிரபலப்படுத்தினார்.
- பிரிட்டிஷின் பொருளாதார சுரண்டால்களை மக்களுக்கு தெரியப்படுத்தினர்.
- பொதுவான அரசியல், பொருளாதார பிரச்சனையை வைத்து மக்களை கூட்டி அரசியல் போராட்டம் நடத்த பயிற்சி அளித்தனர்.

### தீவிரவாத காலகட்டம் (1906-18)

- மிதவாதிகளின் செயல்முறைகளில் நம்பிக்கை இழந்து பிரிட்டிஷ் அரசின்

DISTRICT EMPLOYMENT OFFICE VILLUPURAM



Downloaded from https://t.me/tnpscfree

அடக்குமுறை நடவடிக்கைகள், சீர்கெட்ட நிர்வாகமுறை மற்றும் பொருளாதார சுரண்டலுக்கு எதிராக தீவிரமாக அரசின் போக்கை எதிர்க்க முனைந்தவர்கள் ஆவார்கள்.

**பிரிட்டிஷ் அடக்குமுறைகள்:**

- அரசிற்கு எதிரான பிரச்சார தடைச்சட்டம் (1898)
- இந்திய அலுவல் இரகசியச் சட்டம் (1904) பத்திரிக்கைகளை கட்டுப்படுத்தியது.
- அரசுக்கு எதிராக மக்களை தூண்டியதாக தில்கரை (1897) கைது செய்தது.
- விசாரணையின்றி நாடு கிடத்தியது. (1897)
- கொடும் பஞ்சத்திற்கும், பிளேக் நோய்க்கும் சரியான நிவாரணம் வழங்காமை
- கல்கத்தா பல்கலைகழகச் சட்டம் (1904)
- கர்சன் பிரபுவின் வங்கப் பிரிவினை (1905)
- தீவிரவாதிகளின் முக்கிய குறிக்கோள் பூரண சுயராஜ்ஜியம் பெறுவதே ஆகும்.

**தீவிரவாதிகளின் வழிமுறைகள்:**

- எதிர்ப்பு முறைகள்: எ.கா.ஒத்துழையாமை, அன்னியப் பொருட்கள் பகிஷ்கரிப்பு அரசுப்பணிகள் நீதிமன்றம், பள்ளி, கல்லூரிகள் புறக்கணிப்பு
- சுதேசி இயக்கம் நடத்துதல்
- புதிய தேசிய கல்வி முறையை பின்பற்றுதல் ஆகியனவாகும்.
- திலகர் சமய விழாக்கள் மூலம் (விநாயகர் விழா (1893) சிவாஜி விழா (1895)) தேசிய ஒற்றுமையையும் மக்களின் பங்கேற்பையும், அரசியல் கல்வியையும் இதன் மூலம் புகுத்தினர்.
- தமிழ்நாட்டில் வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் “சுதேசி ஸ்டீம் நேவிகேசன் கம்பெனி” என்ற கப்பல் போக்குவரத்து நிறுவனத்தை தூத்துக்குடியில் தொடங்கினார்.

**வங்கப்பிரிவினை (1905)**

- கர்சனுக்கு முன்பு வங்கப் பிரிவினையைப் பற்றிய திட்டத்தை முன்மொழிந்தவர் அசாம் தலைமை ஆணையர் வில்லியம் வார்ட் என்பவராவார். 1874ம் ஆண்டு வங்களாத்திலிருந்து அசாமை பிரிக்க ஆலோசனை வழங்கினார்.
- வங்காள ராஜதானியை திறமையாக நிர்வகிக்க முடியாத அளவுக்கு பெரிதாக இருந்தது.
- கிழக்கு வங்காளம் வளர்ச்சி குன்றிய நிலையை போக்கி அதன் வளர்ச்சியை துரிதப்படுத்துதல்.
- உண்மையான காரணம் வளர்ந்து வரும் தேசிய எழுச்சிக்கு வங்காளம் முக்கிய ஆதாரமாக விளங்கியது. அதை தடை செய்வதற்கு வங்கப்பிரிவினையை அரசு செய்தது.
- பிரிவினை திட்டம் 1905ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் அமுலுக்கு வந்தது.

**பிரிவினை எதிர்ப்பு போராட்டம்**

- பிரிவினை எதிர்ப்பு இயக்கம் 1905ஆம் ஆண்டு ஆகஸ்டு 7ம் நாள் கல்கத்தாவில் உள்ள டவுன் ஹாலில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1905 அக்டோபர் 16 பிரிவினையை அமுல் செய்த அன்று தேசிய துக்க தியமாக அனுசரிக்கப்பட்டது.

**சுதேசி இயக்கம்**

- வங்காளத்தில் தீவிரமாக சுதேசி இயக்கத்தை ஆரம்பித்தனர். பல சுதேசி நெவாலைகள் வங்கிகள் திறக்கப்பட்டன. பி.சி. ராய் “பொங்கல் கெமிக்கல் சுதேசி ஸ்டோர் தொடங்கினார்.
- புறக்கணிப்பு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது வெளிநாட்டு பொருட்கள், சர்க்கரை, மருந்துகள், துணிகள் போன்றவைகளை பயன்படுத்தாமல் தவிர்ப்பது மட்டும் அல்லாமல் எரிக்கவும் செய்தனர்.
- நாடு முழுவதும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களால் மேற்கு மற்றும் கிழக்கு வங்காளம் 1911ம் ஆண்டும் மீண்டும் இணைக்கப்பட்டது.
- முதன்முறையாக ஒரு பொது நோக்கத்திற்காக மக்கள் தங்கள்

DISTRICT EMPLOYMENT OFFICE VILLUPURAM



Downloaded from https://t.me/tnpscfree

கோரிக்கையை நிறைவேற்றும் நோக்கோடு போராடினார். தேசிய இயக்கம் மக்கள் இயக்கமாக உருவெடுத்தது.

- வங்காளம் இணைக்கப்பட்ட அதே சமயம் பீகார் மற்றும் ஒரிசா என்ற இரு புதிய மாநிலங்கள் உருவாக்கப்பட்டது.

## கர்சன் பிரபுவின் நிர்வாகச் சீர்திருத்தங்கள்

- பஞ்சத்திற்கான காரணங்களை ஆயுள் செய்ய சர். அந்தோணி மக்டோனல் என்பவர் தலைமையில் பஞ்சம் பற்றிய குழு அமைத்தார். அந்த குழு 1901ல் அறிக்கையை சமர்பித்தது.
- 1905ல் பீகாரில் உள்ள பூசா என்னுமிடத்தில் விவசாய ஆராய்ச்சி கழகத்திற்கு அடிக்கல் நாட்டினார்.
- பாசன வசதியை பெருக்கவும் அதற்கான சாத்தயக்கூறுகளை ஆராயவும் சர்.வோப்பின் ஸ்கார்ட் மான்கிரிப் என்பவரின் தலைமையில் 1901ல் பாசன வசதிக்குழு அமைக்கப்பட்டது.
- வாணிபம் மற்றும் தொழில் துறையை 1905ல் ஏற்படுத்தினார்.
- ரயில்வே நிர்வாகத்தை சீர்படுத்த இரயில்வே குழுவை சர்தாமஸ் இராபர்ச்சன் என்பவர் தலைமையில் நியமித்தார்.
- கல்வித்துறையின் குறைபாடுகளை களைய கல்விக்குழு ஒன்றை சர் தாமஸ் இராபே என்பவரின் தலைமையில் 1901ல் பாசன வசதிக்குழு அமைக்கப்பட்டது.
- வாணிபம் மற்றும் தொழில் துறையை 1905ல் ஏற்படுத்தினார்.
- ரயில்வே நிர்வாகத்தை சீர்படுத்த இரயில்வே கல்விக்குழு ஒன்றை சர் தாமஸ் இராபே என்பவரின் கீழ் ஒரு குழு அமைக்கப்பட்டது.
- அக்குழுவின் பரிந்துரையின்படி 1904ஆம் ஆண்டு இந்தியப் பல்கலைக்கழகங்களில் சட்டம் உருவாயிற்று.
- காவல்துறை நிர்வாகத்தை மேம்படுத்த 1902ல் காவல் குழு பிரேசர் என்பவரின் கீழ் அமைக்கப்பட்டது.
- காவல்துறை நிர்வாகத்தை மேம்படுத்த 1902ல் காவல் குழு பிரேசர் என்பவரின் கீழ் அமைக்கப்பட்டது.
- தொல்பொருள் துறையை முதன்முதலில் இந்தியாவில் ஏற்படுத்தினார். அதன் தலைவராக சர்.ஜான் மார்சல் என்பவரை நியமித்தார்.
- 1904ஆம் ஆண்டு புராதனச் சின்னங்களின் பாதுகாப்புச்சட்டம் இயற்றப்பட்டது.
- இந்திய நாணயச் சட்டம் 1899ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. அதன்படி இந்திய ரூபாயின் மதிப்பு தங்க அளவீட்டு முறைக்கு மாற்றம் செய்யப்பட்டது.
- 1904ஆம் ஆண்டு கூட்டுறவு கடன் சங்கங்களின் சட்டம் இயற்றப்பட்டது.

DISTRICT EMPLOYMENT OFFICE, VILLUPURAM

## காங்கிரஸ் சூரத் பிளவும் - லக்னோ இணைவும்

- 1907ஆம் ஆண்டு கூட்டம் நாகபுரியில் நடைபெறுவதாக இருந்தது. பின்னர் தீவிரவாதிகளின் செல்வாக்கு மிக்க இடம் என்ற காரணத்தால் கூட்டத்தின் இடம் சூரத்திற்கு மாற்றப்பட்டது.
- 1907ல் டிசம்பர் 26, 27 ஆகிய இரண்டு நாட்களிலும் கூட்டங்களில் குழப்பம் நடைபெற்றது. டிசம்பர் 28ஆம் நாள் டாக்டர். ராஷ்பிகாரி கோஷின் தலைமையில் மிதவாதிகளும், அரவிந்தகோஷின் தலைமையில் தீவிரவாதிகளும் தனித்தனியே கூடினார். இதுவே சூரத் பிளவு எனப்படுகிறது.

### லக்னோ இணைவு

- சூரத் பிளவுக்கு பின்பு காங்கிரஸ் செயல்பாடு குன்றியது. திலகர் சிறையிலிருந்த போது தீவிரவாதிகள் செயலிழந்து நின்றார்.
- திலகரும், கோகுலேயும் மேற்கொண்ட இணைப்பு முயற்சி ஃப்ரோஷாமேத்தாவின் எதிர்ப்பால் தோல்வியில் முடிந்தது.
- 1916ம் ஆண்டு லக்னோவில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் மிதவாதிகளும் தீவிரவாதிகளும் இணைந்தனர். இதற்கு திலகரும், அன்னிபெசன்ட்டும் பெரும் பங்காற்றினர்.



Downloaded from https://t.me/tnpscfree

## முஸ்லீம் லீக்கின் தோற்றம்

- வங்காள நாவாப் சலிமுல்லாக்கான் இந்திய முஸ்லீம் மக்களுக்கான அமைப்பு அமைக்கும் யோசனையை வெளியிட்டார். அதன்படி 1906ஆம் ஆண்டு டிசம்பர் 30ஆம் நாள் அகில இந்திய முஸ்லீம் லீக் அமைக்கப்பட்டது. அதன் நிரந்திர தலைவராக ஆகாகான் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

- **மின்டோ – மார்லி சீர்திருத்தம்**
- 1909ம் ஆண்டு இந்திய விவகாரச் செயலர் மார்லி பிரபு இந்திய சட்டமன்றங்களில் சீர்திருத்தம் செய்யப் போவதாக அறிவித்தார்.
- அரச தீவிரவாதிகளையும், பயங்கரவாதிகளையும் அடக்கியது. மிதவாதிகளை ஆதரித்து பரிசு வழங்கியதே இந்த சீர்திருத்தம்.

- **முஸ்லீம் களுக்கு தனி இட ஒதுக்கீடு – வகுப்புவாரி பிரதிநிதித்துவம்**

## லக்னோ ஒப்பந்தம் 1916

- 1916ல் லக்னோ மாநாட்டின் போது காங்கிரஸும் - முஸ்லீம் லீக்கும் ஒப்பந்தம் மேற்கொண்டது. பொதுக்கருத்துடன் அரசியல் சீர்திருத்தத்தை பெற முயல்வதும் பிரதிநிதித்துவ அரசாங்கத்தை மத்தியிலும் உருவாக்க வேண்டும். டோமினியன் அந்தஸ்து வழங்க வேண்டும் என்று கோரியது.

## தன்னாட்சி இயக்கம் 1916

- திலகர் தன்னாட்சி இயக்கத்தை 1916ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கினார். அன்னிபெசன்ட் 1916ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தொடங்கினார்.
- திலகரின் தன்னாட்சி இயக்கம் மகாராஷ்டிரம் (பம்பாய் நீங்கலாக) கர்நாடகம், மத்திய மாநிலம் மற்றும் பீரார் பகுதிகளில் செயல்பட்டு 14,000 உறுப்பினர்களை பெற்றது.
- அன்னிபெசன்ட் திலகரின் பகுதி நீங்கலாக மற்ற அனைத்து இந்தியப் பகுதிகளிலும் செயல்பட்டது. 27,000 உறுப்பினர்களை பெற்றது.
- சென்டின் தன்னாட்சி கழகத்திற்கு டபிள்யூ.பி வாடியாவும் அருண்டேலும் பெரிதும் பாடுபட்டனர்.
- வெலன்டைன் சிரோல் என்பவர் திலகரை பற்றி எழுதிய ‘பாதர் ஆப் இந்தின் அன்ரெஸ்ட்’ புத்தகத்தை எதிர்த்து வழக்கு தொடர திலகர் இலண்டன் சென்றதால் திலகரின் இயக்கம் தலைமை இல்லாமல் செயலிழந்தது.

## மகாத்மா காந்தியின் ஆரம்பகால கட்டம்

- காந்தியின் வளர்ச்சிக்கு காரணங்கள் தென்னாப்பிரிக்காவில் 1893-1914 வரை அவர் பெற்ற அனுபவம்.
- காந்தி 1916ஆம் ஆண்டு அகமதாபாத்தில் சபர்மதி ஆசிரமத்தை நிறுவினார்: அதன்மூலம் அதன் உறுப்பினர்களுக்கு உண்மையையும் மற்றும் அகிம்சையையும் பயிற்றுவித்தார்.

## சம்பிரான் சத்தியாகிரகம்:

- இந்தியாவின் காந்தியின் முதல் அரசியல் சோதனை போராட்டமாக அமைந்தது.
- 20ஆம் நூற்றாண்டில் சின்தட்டிக் சாயம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு இண்டிகோ அதன் சந்தை மதிப்பை இழந்தது. ஆனால் தோட்ட அதிபர்கள் இண்டிகோ விவசாயிகளை விடுவிக்காமல் நிலகுத்தகையை அதிகரித்தும் மேலும் சட்டபூர்வமற்ற வழியில் விடுவிக்க கட்டணம் வசூலித்தனர்.
- இதனை எதிர்த்து இராஜ்குமார் சுக்லாவும் ஷம்பீர் முகமதுவும் காந்திய அழைத்தனர்.
- காந்தி எதிர்த்து இராஜ்குமார் சுக்லாவும் ஷம்பீர் முகமதுவும் காந்தியை அழைத்தனர்.

DISTRICT EMPLOYMENT OFFICE VILLUPURAM



Downloaded from https://t.me/tnpscfree

- காந்தி சம்பரானுக்கு இராஜேந்திரபிரசாத், மாஸ்ஹர் - உல் - ஹூக் கிருபாலானி மற்றும் மகாதேவ் தேசாய் உடன் சென்று விசாராணை செய்தார். ஆரம்பத்தில் அரசு காந்தியை எதிர்த்தது. பின்னர் அவரையே விசாரணை குழுவிற்கு உறுப்பினராக நியமித்தது.
- தீன்காத்திகா முறை ஒழிக்கப்பட்டது. விவசாயிகளிடம் முறையற்று வசூல் செய்யப்பட்ட தொகையில் 35% ஊதிய உயர்வை அளிக்க முன்வந்தனர்.

**கேதா சத்தியகிரகம் 1918:**

- கேதா மாவட்டத்தில் (குஜராத்) ஏற்பட்ட வறட்சியின் காரணமாக விவசாயிகள் வரிதள்ளுபடியை அரசிடம் வேண்டினர். ஆனால் அரசு வரியை தள்ளுபடி செய்யாமல் வரிவசூல் செய்ய பலாத்காரத்தை பயன்படுத்தியது.
- காந்தி விவசாயிகளிடம் வரிகொடுக்க வேண்டாம் என்று அழைப்பு விடுத்ததால் ஆங்கில அரசு பலத்தை பயன்படுத்தி பின்னர் வரி வசூலை நிறுத்தி வைக்க இரகசிய ஆணையை பிறப்பித்தது. ஆகையால் குஜராத் விவசாயிகளிடம் காந்தியின் புகழ் பெருகியது.
- இந்த மூன்று போரட்டங்களுக்கு காந்திக்கு வெற்றியை தேடிக்கொடுத்ததால் அவர் அகில இந்திய தலைவர் நிலையை அடைந்தார். அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

**மாண்டேகு – செம்ஸ்போர்ட் சீர்திருத்தம்**

- எட்வின் மாண்டேகு என்று புதிய இந்திய விவகாரத்துறை செயலர் இந்திய தேசியவாதிகளை அமைதிபடுத்த 1917ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20ஆம் நாள் அரசின் நிர்வாகக் கொள்கையை (ஆகஸ்டு அறிக்கை) அறிவித்தார்.
- 1919ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி மாநிலங்களில் இரட்டையாட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1921ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாளிலிருந்து சென்னை, வங்காளம், பம்பாய், ஐக்கிய மாகாணம், பஞ்சாப், பீகார், மத்திய மாகாணம், அஸ்ஸாம் ஆகிய எட்டு மாநிலங்களில் இரட்டையாட்சி அமுல் செய்யப்பட்டது.
- மத்தியில் இரண்டு அவைகள் உடைய சட்டசபை உருவாக்கப்பட்டது. மாநிலங்கள் அவை, மத்திய சட்டமியற்றும் சபை.
- இலண்டனில் புதிதாக இந்திய உயர் ஆணையர் பதவி உருவாக்கப்பட்டது.

**காந்தியின் தீவிர செயல்பாடுகள்**

**ரௌலட் சட்டமும் ஜாலியன் வாலாபாக் படுகொலையும்**

- உலகப்போர் முடிந்தவுடன் பயங்கரவாதத்தை அடக்கும் முயற்சியில் நீதிபதி சிட்னி ரௌலட் தலைமையில் 1917 டிசம்பர் 10ம் நாள் ஒரு குழு அமைந்தது. அந்த குழு 1918 ஏப்ரல் 15ஆம் நாள் அறிக்கையை சமர்பித்தது.
- அதன் பரிந்துரையின்படி 1919 மார்ச் 18ஆம் நாள் சட்டம் இயற்றப்பட்டது. அச்சட்டத்தின்படி,
- சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்படும்.
- நீதிமன்றத்தில் இரகசிய விசாரணை நடத்தப்படும்.
- விசாரணையின்றி ஒருவரை இரண்டு ஆண்டு காலம் சிறையில் வைக்கலாம்.
- நிர்வாக அதிகாரிகள் எவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யலாம்.
- ரௌலட் சட்டத்தை கருப்பு மசோதா என்று அழைத்தனர்.
- இந்த சட்டத்தை காந்தியடிகள் எதிர்த்து சாத்வீகப் போரட்டத்தை தொடங்கினார்.
- 1919ம் ஆண்டு மார்ச் 30ம் நாள் சத்தியாகிரக நாளாக நாடெங்கும் அனுசரிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். பின்னர் சென்னையில் வைத்து சத்தியாகிரக நாளை ஏப்ரல் 6க்கு தள்ளி வைத்தார்.

**ஜாலியன் வாலாபாக் படுகொலை**

- ரௌலட் சட்டத்தினை எதிர்த்து நடந்த சத்தியாகிரகத்தை ஒட்டி பஞ்சாப்பின் புகழ்மிக்க

DISTRICT EMPLOYMENT OFFICE VILLUPURAM



Downloaded from https://t.me/tnpscfree

தலைவர்களாகிய டாக்டர் சைபுதீன் கிட்சுலுவும் டாக்டர் சத்திய பாலும் நாடுகடத்தப்பட்டனர்.

- இதனை கண்டித்து மக்கள் போரட்டத்தில் ஈடுபட்டனர். அரசு கடுமையான அடக்குமுறையை கையாண்டதோடு, மனித உரிமைகள் மிக கொடிய முறையில் மீறப்பட்டது.
- அரசின் கீழ்த்தரமான அடக்குமுறைகளை கண்டித்து 1919ஆம் ஆண்டு ஏப்ரல் 13ம் நாள் பைசாகி தினத்தன்று ஜாலியன் வாலாபாக் என்ற இடத்தில் மூன்று பக்கம் முடிய ஒரு பூங்காவில் பொது கூட்டம் நடந்தது.
- பொதுக்கூட்டம் நடைபெற்று கொண்டிருக்கும் போது ஜெனரல் டயர் எந்த ஒரு முன்னறிவிப்பும் இன்றி துப்பாக்கியால் சுட உத்தரவிட்டார். அரசின் அறிக்கையின்படி 379பேர் இறந்தனர். ஆனால் 1000க்கும் மேற்பட்டோர் இறந்தனர்.
- இந்தியா முழுவதிலும் இந்த கொடூரச்செயல் கண்டிக்கப்பட்டது. இரவிரந்திர நாத் தாகூர் நைட்ஹீட் பட்டத்தை துறந்தார்.
- இப்படுகொலை பற்றி விசாரணை செய்ய ஒழுங்கின்மை விசாரணை குழுவை நீதிபதி ஹண்டர் பிரபுவின் தலைமையில் அமைத்தது. குழுவின் 7 உறுப்பினர்களில் மூவர் இந்தியர்களாவர்கள்.
- 7.காங்கிரஸும் விசாரணை குழுவை நியமித்தது. மோதிலால் நேரு, சி.ஆர். தாஸ், மகாத்மா காந்தி அதன் உறுப்பினர்களாவார்கள்.

## கிலாபத் இயக்கம் (1919)

- செவ்ரஷ் உடன்படிக்கை துருக்கியை தூண்டியதால் இந்திய முஸ்லீம்கள் பிரிட்டிஷ் பேரரசின் மீது கோபமும், வெறுப்பும் கொண்டனர். அதன் விளைவே கிலாபத் இயக்கமாகும்.

### நோக்கம்

- கிலாபத் இயக்கம் இரண்டு அடிப்படை நோக்கங்களை கொண்டது.
- முதல் உலகப்போருக்கு முன்பு இருந்த நிலையிலேயே துருக்கியில் பேரரசின் எல்லைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.
- துருக்கி சுல்தானின் சமயத்தலைமை ஆட்சி அதிகாரம் இரண்டும் முன்பிருந்தபடியே உறுதிசெய்யப்பட வேண்டும்.
- கிலாபத் மாநாடு 1919 செப்டம்பர் 21ஆம் நாள் லக்னோவில் நடைபெற்றது. அலி சகோதர்களும் முகமது அலி, ஷவுக்கத் அலி மௌலானா அபுல்கலாம் ஆசாத்தும் அம்மாநாட்டின் முக்கிய தலைவர்களாவர்.
- 1919ஆம் ஆண்டு அக்டோபர் 17ம் நாள் கிலாபத் தினமாக நாடு முழுவதும் அழைப்பு விடுவிக்கப்பட்டது.
- இரண்டாவது கிலாபத் மாநாடு டெல்லியில் 1919ஆம் ஆண்டு நவம்பர் 23, 24ஆம் நாள் நடைபெற்றது. இதில் காந்தியடிகள் கூட்டத் தலைவராக தேர்ந்து எடுக்கப்பட்டார்.

## ஒத்துழையாமை இயக்கம் (1919-1922)

- காந்தியின் அறிக்கையின்படி கிலாபத் மாநாடு நியமித்த குழு ஒத்துழையாமை திட்டத்தை பற்றிய அறிக்கையை சமர்பித்தது.
- அந்த அறிக்கையின்படி நடவடிக்கையை எடுக்க கல்கத்தாவில் லாலா லஜபதிராய் தலைமையில் 1920ஆம் ஆண்டு செப்டம்பர் 4ஆம் நாள் சிறப்புக்கூடம் கூட்டப்பட்டது ஒத்துழையாமை தீர்மானம் நிறைவேறப்பட்டது.

### ஒத்துழையாமை இயக்கத்திற்கான காரணம்

- ஜாலியன் வாலபாக் படுகொலையும் அதுபற்றி விசாரணை செய்த ஹண்டர் குழுவின் மேம்போக்கான அறிக்கையும்.
- கிலாபத் பிரச்சனை சுயராஜ்ஜிய கோரிக்கையையும் சேர்த்து ஒத்துழையாமை இயக்கத்தையும் பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக ஆரம்பித்தார்.



DISTRICT EMPLOYMENT OFFICE VILLUPURAM

Downloaded from https://t.me/tnpscfree

**திட்டம்**

- ஒத்துழையாமை இயக்கம் நேர்மறை மற்றும் எதிர்மறை திட்டம் இரண்டையும் கொண்டது.
- நேர்மறைத்திட்டத்தில் சுதேசி, கதர் நூற்றல், நெய்தல் ஊக்குவித்தல், தீண்டாமை நீக்கம் மூலம் சமுதாயச் சமத்துவம், இந்து முஸ்லீம் ஒற்றுமை ஆகியவை அடங்கும்.
- எதிர்மறை திட்டத்தில் சட்டமன்ற நீதிமன்ற, கல்விநிலைய போலீஸ், இராணுவப் புறக்கணிப்பு, விதேசிய பொருள் விலக்கம், வரிகொடாமை ஆகியவை அடங்கும்.
- நவம்பர் 1921- பிப்ரவரி 1922
- கிலாபத் இயக்கத்தின் பூரண சுயராஜ்ஜியத்தைக் கோரினர். காந்தி வரிகொடாமை இயக்கத்தை பர்தோலியில், ஆரம்பிக்க அழைப்பு விடுத்தார்.

**ஒத்துழையாமையை இயக்கம் விலக்கி கொள்ளப்படல்**

- **1922 ஆம் ஆண்டு பிப்ரவரி 5ம் நாள் சௌரி – சௌரா** என்ற இடத்தில் விதேசி பொருட்கள் புறக்கணிப்பு போராட்டத்தை ஒட்டி எழுந்த வன்முறையில் 22 காவலர்களும், காவல்நிலையமும் தீக்கிரைக்கு உள்ளானது. அதை தொடர்ந்து காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்தினார்.
- **பர்தோலியில் 1922ம் ஆண்டு பிப்ரவரி 12ம் நாள் கூடிய காங்கிரஸ் செயற்குழு காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்தயதை ஏற்றுக்கொண்டது.**

**சுயராஜ்ஜிய கட்சியினர்**

- சட்டமன்றத்தில் நுழைவதற்கு **சி.ஆர். தாஸ், மோதிலால் நேரு, வித்தல்பாய் பட்டேல்** போன்றோர்கள் ஆதரவு கருத்தைக் கொண்டனர்.
- **1922ம் ஆண்டு காயாவில்** கூடிய காங்கிரஸ் மாநாட்டில் அதன் தலைவரான சி.ஆர். தாஸ் (சித்தரஞ்சன் தாஸ்) சட்டமன்ற நுழைவு பற்றிய தீர்மானத்தை கொணர்ந்தார். ஆனால் தீர்மானம் தோல்வியடைந்தது.
- 1923ம் ஆண்டு 1ம் நாளில் காங்கிரஸ் - கிலாபத் சுயராஜ்ஜியக்கட்சி சி.ஆர்.தாஸை தலைவராகவும், மோதிலால் நேருவை செயலாளாராகவும் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.
- 1923ம் ஆண்டு அக்டோபர் 14ம் நாள் தேர்தல் அறிக்கையை வெளியிட்டது. தேர்தலில் வங்காளம், பம்பாய், பீகார், ஐக்கிய மாகாணத்திலும் மிகபெரிய வெற்றியை பெற்றது. பஞ்சாப், ஒரிஸா, சென்னை மாநிலங்களில் மட்டுமே பெரும்பான்மை பெறவில்லை.
- தமிழகத்தில் எஸ்.சத்தியமூர்த்தியின் தலைமையில் காங்கிரஸ் கிலாபத் சுயராஜ்ஜியகட்சி அறுதிப் பெரும்பான்மையை சென்னையில் பெற்றது.
- 1925 ல் சி.ஆர்.தாஸ் இறந்த பின்பு சுயராஜ்ஜியகட்சி அதன் முக்கியத்துவத்தை இழந்தது.
- சுயராஜ்ஜியக் கட்சியினரே முதன்முதலில் இந்திய அரசியல் அமைப்பு அமைக்க வட்டமேஜை மாநாட்டை கூட்டவேண்டுமென ஒரு தீர்மானத்தின் மூலம் கேட்டுக்கொண்டனர்.
- இவர்களின் வேண்டுதலின் பேரில் மாண்டேகு – செம்ஸ்போர்டு சீர்த்திருத்ததின் நடைமுறை செயல்பாடுகளை ஆராய இங்கிலாந்து அலெக்சாண்டர் முட்டிமன் தலைமையில் ஒரு குழுவை அனுப்பிவைத்தது.
- இந்திய அரசாங்கச் சட்டம் 1919ஆம் ஆண்டு செயல்பாடுகள் குறித்து பிரிவு 84ன் படி 10 ஆண்டுகள் கழித்து (1929) ஒரு சட்டகுழு அமைத்து சட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும் சுயாட்சி அமைக்க இருக்கும் சாத்திய கூறுகள் பற்றி ஆய்வு செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
- அதன்படியே ஆனால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே ஆய்வு செய்ய ஏழு உறுப்பினர்களை கொண்ட பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்களை சர் ஜான் சைமன் (லிபரல்கட்சி) தலைமையில் 1927ம் ஆண்டு நவம்பர் 26ம் நாள் அமைந்தது.

DISTRICT EMPLOYMENT OFFICE VILLUPURAM



Downloaded from https://t.me/tnpscfree

<u>**சைமன் எதிர்ப்புக்கு காரணம்**</u>

- **குழுவில் ஒருவர் கூட இந்தியர் இல்லை.**
- குழுவின் அமைப்பு இந்தியர்களுக்கு இந்திய அரசியலமைப்பை பற்றிய முடிவில் கலந்துக் கொள்ளும் உரிமையை மறைமுகமாக மறுக்கிறது என்றும் குற்றம் சாட்டினார்கள்.

<u>**எதிர்ப்பு**</u>

- 1927ம் ஆண்டு டிசம்பரில் சென்னையில் அன்சாரி தலைமையில் காங்கிரஸ் கூடியது.
- சைமனை "திரும்பிபோ" என்ற கோஷமிட்டு கருப்பு கொடியை காட்டினர்.
- லாகூரில் லாலாலஜபதிராய் தலைமையில் நடைபெற்ற ஆர்பாட்டத்தில் காவல் அதிகாரி சாண்டர்ஸ் தலைமையில் காவலர்கள் தடியடி நடத்தினார். அதில் லாலாலஜபதிராய் தலையிலும் கடும்காயம் ஏற்பட்டது. அதன் காரணமாக அவர் தன் இன்னுயிரை நீத்தார்.
- சைமன்குழு தனது அறிக்கையை 1930ஆம் ஆண்டு மே 27ம் நாள் சமர்பித்தது. அதன் அடிப்படையிலேயே இங்கிலாந்தில் மூன்று வட்டமேசை மாநாடு நடைபெற்றது.

<u>**நேரு அறிக்கை**</u>

- சைமன்குழுவின் வருகைக்கு இந்தியர்களின் எதிர்ப்பை தொடர்ந்து அப்போது இந்திய செயலராக இருந்த பிர்கன் ஹெட் பிரபு என்பவர் "இந்தியாவில் எல்லாத் தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளுகிற வகையில் ஓர் அரசியலைப்பினை இந்தியர் தயாரித்து காட்டட்டுமே பார்க்கலாம்" என்று சவால் விட்டார்.
- மீண்டும் 1928ஆம் ஆண்டு மே 19ம் நாள் பம்பாயில் கூடிய பிரதிநிதிகளின் கூட்டம் அரசியல் அமைப்பினை உருவாக்க மோதிலால் நேரு தலைமையில் ஒரு குழுவினை அமைத்தது. அதில் ஒன்பது உறுப்பினர்கள் இருந்தனர்.
- ஆனால் முஸ்லீம் லீக்குடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இனச்சிக்கல் பற்றிய விஷயமே ஆகும்.

<u>**பூரண சுயராஜ்ஜியத் தீர்மானம்**</u>

- 1929ம் ஆண்டு லாகூரில் கூடிய காங்கிரஸ் மாநாட்டிற்கு ஜவஹர்லால் நேரு தலைமை தாங்கினார்.
- 1929ம் ஆண்டு டிசம்பர் 31ம் நாள் நடுநிசி வேளையில் இராவி ஆற்றங்கரையில் மூவண்ண தேசியக்கொடியை ஜவர்ஹர்லால் நேரு ஏற்றினார்.
- 1930ஆம் ஆண்டு ஜனவரி 26ம் நாள் பூரண சுதந்திர தினமாக அறிவித்து பூரண சுதந்திர பிரகடனத்தை வெளியிட்டார்.

<u>**சட்டமறுப்பு இயக்கம்**</u>

- 1930 ஆம் ஆண்டு பிப்ரவரியில் சபர்மதி ஆசிரமத்தில் கூடிய காங்கிரஸின் செயற்குழு புதிய கட்ட சட்டமறுப்பு போரட்டத்தை காந்தியை தலைமையேற்று நடந்த அனைத்து அதிகாரத்தையும் வழங்கியது.

<u>**தண்டியாத்திரை**</u>

- 1930ஆம் ஆண்டு மார்ச் 12ம் நாள் 78 தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரமச் சீடர்களுடன் சபர்மதியிலிருந்து 385கி.மீ தொலைவில் தண்டிக்கு பாத யாத்திரையாகப் புறப்பட்டார்.
- 24நாட்கள் நடைப்பயணத்துக்கு பின்னர் ஏப்ரல் 5ம் நாள் காலை காந்தியடிகள் தண்டியை அடைந்தார். அடுத்தநாள் அதாவது ஏப்ரல் 6ம் நாள் காலை காந்தியடிகள் தண்டியை அடைந்தனர். அடுத்தநாள் அதாவது ஏப்ரல் 6ம் நாள் காலையில் உப்பை அள்ளி உப்புச் சட்டத்தை மீறி சத்தியாகிரகத்தைத் துவங்கினார்.
- தமிழ்நாட்டில்சி. ராஜகோபாலச்சாரியர் நூறு தொண்டர்களுடன் திருச்சியில் இருந்து வேதாரண்யத்திற்கு சென்று உப்புச் சட்டத்தை மீறினார்.
- டி. பிரகாசமும், கே. நாகேஸ்வராவும் மெரினா கடற்கரையில் உப்பு சத்தியாகிரகம் செய்தனர்.
- 1930ஆம் ஆண்டு மே 4ம் நாள் காந்தி கைது செய்யப்பட்டு ஏரவாடா சிறையில் அடைக்கப்பட்டார்.

DISTRICT EMPLOYMENT OFFICE, VILLUPURAM



Downloaded from https://t.me/tnpscfree

- அதன் பின்பு சரோஜிநாயுடு தலைமையேற்று அவரும் தர்சனா உப்புமண்டி முற்றுகையில் கைது செய்யப்பட்டார்.

**முதல் வட்டமேசை மாநாடு (1930)**

- முதல் வட்ட மேசை மாநாடு இலண்டனில் தொடங்கியது. காங்கிரஸ் கலந்து கொள்ளவில்லை.
- 1930 நவம்பர் 12 முதல் 1931 ஜனவரி 19 வரை முதல் வட்ட மேசை மாநாடு நடைபெற்றது.
- 89 பிரதிநிதிகள் கலந்துக்கொண்டனர் பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மக் டொனால்டு தலைமை தாங்கினார்.

**காந்தி - இர்வின் உடன்படிக்கை (1931)**

- இந்தியாவில் சட்டமறுப்பு இயக்கம் தீவிரமடைந்ததால் வைஸ்ராய் இர்வீன் காந்தியையும் பிற செயற்குழு உறுப்பினர்களையும் விடுதலை செய்தார்.
- சாப்ரு, செயக்கர் சீனிவாச சாஸ்திரி அவர்களின் முயற்சியால் காந்தி இர்வீன் பிரபுவை சந்திக்க சம்மதித்தார். அதன் காரணமாக காந்தி இர்வீன் ஒப்பந்தம் ஏற்பட்டது.

**ஒப்பந்தத்தின் சாராம்சம்**

- பகத்சிங் மற்றும் அவரது கூட்டாளிகள் மீது விதிக்கப்பட்ட மரண தண்டனையை குறைக்க இந்த ஒப்பந்தம் வகைசெய்யவில்லை என்றும் போரட்டத்தின் போது நடந்த போரில், இராணுவ அத்துமீறல்கள் பற்றி எதுவும் கூறாததால் ஒப்பந்தம் பற்றி மக்களிடையேயும் தலைவர்களிடமும் எதிர்ப்பு இருந்தது.

**இரண்டாவது வட்டமேசை மாநாடு (1931)**

- இரண்டாவது வட்டமேசை மாநாடு இலண்டனில் 1931ம் ஆண்டு செப்டம்பர் 7முதல் டிசம்பர் 1ம் தேதி வரை நடைபெற்றது.
- காங்கிரஸ் சார்பில் அதன் ஒரே பிரதிநிதியாக காந்தியடிகள் கலந்து கொண்டார்.

**மீண்டும் போராட்டம் (1932 ஜனவரி3)**

- இர்வீன் பிரபுவுக்கு பின்பு வைரஸ்ராயாக வந்த வெல்லிங்டன் பிரபு காந்தி - இர்வீன் ஒப்பந்தத்தை கைவிட்டார். அடக்குமுறையை கையாண்டார்.
- வரிகொடாக் கிளர்ச்சியில் ஈடுபட்ட நேரு, ஷெர்வானி, போன்றோரும், வங்காளத்தில் சுபாஸ்சந்திரபோசும் அரசுக்கெதிரான நடவடிக்கைகளுக்காக கைது செய்யப்பட்டார்கள்.
- இவையாவும் காந்தி லண்டனில் இருந்தபோது நடைபெற்றவையாகும். காந்தி இந்தியா திரும்பியவுடன் வைஸ்ராயை சந்திக்க மேற்கொண்ட முயற்சியகள் பலன் அளிக்கவில்லை. ஆகையால் காந்தி மீண்டும் சட்டமறுப்பு இயக்கத்தை 1932ம் ஆண்டு ஜனவரி 3ம் நாள் துவங்கினார்.
- காந்தி ஏரவாடா சிறையில் அடைக்கப்பட்டார்.

**வகுப்பு வாரித் தீர்வு**

- இரண்டாம் வட்ட மாநாட்டில் வகுப்பு வாரித் தீர்வு குறித்து உடன்பாடு ஏற்படாததால் பிரிட்டிஷ் பிரதமர் மகடொனால்டு தனது வகுப்பு வாரித் தீர்வை ஆகஸ்ட் 17ம் நாள் அறிவித்தார்.
- அதற்கெதிராக காந்தியடிகள் சாகும் உண்ணாவிரதத்தை 1932ம் ஆண்டு செப்டம்பர் 20ஆம் நாள் துவங்கினார்.

**பூனா ஒப்பந்தம்**

- இந்த உடன்பாடு 1932 செப்டம்பர் 26ம் நாள் டெல்லியிலும் இலண்டனிலும் அரசால் ஏற்கப்பட்டு ஒரே சமயத்தில் வெளியிடப்பட்டது.

**மூன்றாவது வட்டமேசை மாநாடு**

- 1932ம் ஆண்டு நவம்பர் 17முதல் டிசம்பர் 24வரை நடைபெற்றது.
- காங்கிரஸ் அதில் கலந்துக்கொள்ளவில்லை.
- மூன்று வட்டமேசை மாநாடு பற்றிய வெள்ளை அறிக்கையை 1933 மார்ச் மாதம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது. இதன் அடிப்படையிலேயே 1935ம் ஆண்டு இந்திய அரசாங்கச்சட்டம் இயற்றப்பட்டது.
- காந்தி 1934 மே 20ம் நாள் சட்ட மறுப்பு இயக்கத்தை நிரந்தரமாக நிறுத்திவிட்டார்.

DISTRICT EMPLOYMENT OFFICE VILLUPURAM



Downloaded from https://t.me/tnpscfree

**காங்கிரஸ் கட்சியும் அதன் மாநில அரசாங்கங்களும்**

- 1935ம் ஆண்டு சட்டத்தை காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் தேர்தலில் போட்டியிட முடிவு செய்தது.
- 1937ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், சென்னை, பீகார், ஒரிஸ்ஸா ஆகிய 5 மாநிலங்களில் அறுதிப் பெரும்பான்மை பெற்றது.
- பம்பாய், அஸ்ஸாம், வடமேற்கு எல்லை மாகாணம் ஆகிய மாநிலங்களில் தனிப்பெரும் கட்சியாக வெற்றிப்பெற்றது.
- பஞ்சாப்பில் யூனியனிஸ்டு கட்சி பெரும்பான்மை பலத்தைப் பெற்றது.
- வங்காளத்தில் முஸ்லீம் பிரஜாகட்சி (41இடங்கள்) முஸ்லீம் லீக் (40) சேர்ந்து முஸ்லீம் ஆட்சியை நிறுவினர்.
- காங்கிரஸ் 7 மாநிலங்களில் ஆட்சியை நிறுவியது. மொத்தம் 11 மாநிலங்களில் 4 மாநிலங்களில் பிற கட்சியினர் ஆட்சியை அமைத்தார்.
- சிந்துவில் மட்டுமே முஸ்லீம் லீக் கட்சி ஆட்சி அமைத்தது. அஸ்ஸாமில் முஸ்லீம் கூட்டணி அரசு நிறுவப்பட்டது.
- மாநல காங்கிரஸ் அரசுகளை ஒருங்கிணைத்து தலைமையிடத்தின் கட்டுக்குள் வைக்கவும் ஒருமித்த ஆட்சி எல்லா மாநில அரசுக்களுக்கிடையே ஏற்படவும் 1937ம் ஆண்டு மார்ச் ஒரு பாராளுமன்றத்துணைக் குழுவை ஏற்படுத்தியது.
- இந்த குழுவை காங்கிரஸ் மேலிடம் என்று அழைக்கப்பட்டது. இதில் இராஜேந்திர பிரசாத் மௌலானா ஆசாத், வல்லபாய் பட்டேல் ஆகியோர் அதன் உறுப்பினர்கள்.
- சுயாட்சப்பெற்ற மாநில அரசுகள், நிலச்சீர்த்திருத்தம், மதுவிலக்கு, கல்வி, அரிஜன நலன் முன்னேற்றம் என்று பல திட்டங்களை செயல்படுத்தினார்.

**இரண்டாம் உலகப்போரும் காங்கிரஸ் கட்சியும்**

- 1939ம் ஆண்டு செப்டம்பர் முதல்நாள் இரண்டாம் உலகப்போர் மூண்டது.
- இந்திய வைஸ்ராய் லின்லித் பிரபு இந்திய தலைவர்களை கலந்து ஆலோசனை செய்யாமல் இந்தியாவை போரில் ஈடுபடுத்தினார்.
- இந்த வெள்ளை அறிக்கையில் திருப்தியடையாமல் காங்கிரஸ் ஆட்சிசெய்த அனைத்து மாநிலங்களிலும் பதவி விலகியது. மேலும் போர் நடவடிக்கைகளை எதிர்த்தது.
- காங்கிரஸ் அரசு பதவி விலகிய தினத்தினை முஸ்லீம் லீக் விடிவு நாள் ஆக கொண்டாடியது.

**ஆகஸ்டு கொடை**

- லின்லித்கோ பிரபு 1940 ஆம் ஆண்டு 8ம் நாள் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். இதுவே ஆகஸ்டு கொடை எனப்பட்டது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களும், தியாகிகள் மட்டுமே தனிப்பட்ட முறையில் சட்டமறியல் இயக்கத்தில் ஈடுபட அனுமதிக்கப்பெற்றனர். இதுவே தனிநபர் சத்தியாகிரகம் எனப்பட்டது.
- 1940ம் ஆண்டு அக்டோபர் 17ம் நாள் தனிநபர் சத்தியாகிரகப் போராட்டத்தை காந்தி தொடங்கிவைத்தார்.
- முதல் தனிநபர் சத்தியாகிரகியாக வினோபாவிற்கும் அவரை தொடர்ந்து ஜவஹர்லால்நேரு, வல்லபாய் பட்டேலுக்கும் தனிநபர் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டனர்.

**கிரிப்ஸ் தூதுக்குழு**

- கிரிப்ஸ் தூதுக்குழு 1942ம் ஆண்டு மார்ச் 22ம் நாள் இந்தியா வந்து சேர்ந்தது.

**'வெள்ளையனே வெளியேறு' இயக்கம்**

- சுபாஸ் சந்திரபோஸ் ஜப்பான் ஆதரவாளராகவும், ஜவஹர்லால் நேரு பிரிட்டனுடன் சமரச பேச்சு வார்த்தையை துவக்கவும் இராஜாஜி தேசிய அரசாங்கத்தை அமைக்கவும் வலியுறுத்தினர்.
- காந்தி தனது தாக்கமான முடிவை முடிலை அரிஜன் பத்திரிக்கையில் எழுதினார். பிரிட்டன் இந்தியாவை விட்டு வெளியேறினால் ஜப்பான், இந்தியாவை தாக்குவதற்கான

DISTRICT EMPLOYMENT OFFICE VILLUPURAM



Downloaded from https://t.me/tnpscfree

முகாந்திரம் எதுவும் இருக்காது என்பதை எழுதி பிரிட்டன் வெளியேற வேண்டியதன் அவசியத்தை விளக்கினார்.

- அத்தீர்மானம் ஒரு சில மாற்றங்களுடன் பம்பாயில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி ஆகஸ்ட் 7-8 (1942)ம் நாள் ஏற்றுக்கொண்டது.
- அத்தீர்மானம் நிறைவேறிய இரவு அல்லது அதற்கு மறுநாள் அதிகாலையில் காந்தி கைது செய்யப்பட்டார்.

**இராஜாஜி திட்டம் (1944)**

- போர்க்காலத்தில் காங்கிரஸ் இடைக்கால தேசிய அரசை அமைப்பதற்கு முஸ்லீம் லீக் ஒத்துழைக்க வேண்டும்.
- ஜின்னா இந்த திட்டத்தை நிராகரித்தார்.

**ஜின்னா காந்தி சந்திப்பு**

- 1944ம் ஆண்டு செப்டம்பர் 9முதல் 27ம் தேதிவரை நடைபெற்றது.
- ஜின்னா காந்தியை முதன் முறையாக 'மகாத்மா' என்று அழைத்தார். காந்தி ஜின்னாவை காய்தே அஸாம் என்றார்.
- ஜின்னா தனது இருநாட்டு கொள்கையில் விடாப்பிடியாக இருந்தார்.

**வேவல் திட்டம் (1945)**

- பிரிட்டிஷ் பிரதமர் மற்றும் இந்திய விவகாரச் செயலருடன் இந்திய அரசியல் நிலைப்பற்றி விவாதித்து ஒரு திட்டத்தை 1945 ஜுலை 14ல் வானொலி உரையில் வெளியிட்டனர்.

**சிம்லா மாநாடு (1945 ஜுன் 25)**

- வேவல் பிரபு 1945 ஜுன் 25ம் நாள் சிம்லாவில் வேவல் திட்டத்தின் அடிப்படையில் இந்திய தலைவர்களின் மநாட்டை கூட்டினார்.

**அமைச்சரவை தூதுக்குழு (1946)**

- இரண்டாம் உலகப்போர் முடிந்த பின்பு நடந்த தேர்தலில் தொழிலாளர் கட்சி வெற்றி பெற்று கிளெமென்ட் அட்லி பிரதமரானார்.
- இதன் அடிப்படையில் அமைச்சரவை தூதுக்குழுவை இந்திய விவகாரத்துறை செயலர் பெதிக் லாரண்ஸ் பிரபு வர்த்தக அமைச்சர் சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் கடற்படை அமைச்சர் ஏ.வி. அலெக்சாண்டர் ஆகியோரும் இந்திய வைஸ்ராய் வேவல் பிரபுவும் இடம் பெற்றனர்.

**இடைக்கால அரசாங்கம்**

- அமைச்சரவை தூதுக்குழுவின் பரிந்துரையின்படி இடைக்கால அரசு என்கிற குறுகிய காலத்திட்டத்தினை செயல்படுத்தி வேவல் நடவடிக்கையை மேற்கொண்டார்.
- பின்னர் வேவல் ஒரு திட்டத்தினை 1964ல் ஜுன் 16ல் வெளியிட்டு அதன்படி அரசமைக்கப்படும் என்றார். காங்கிரஸ் இதனை எதிர்த்தது. பின்னர் அமைச்சரவை தூதுக்குழுவின் நீண்டகாலத் திட்டத்தினை ஏற்று இடைக்கால அரசில் பங்கேற்க சம்மதித்தது.
- 1946ம் ஆண்டு செப்டம்பர் 2ம் நாள் முஸ்லீம் லீக் இல்லாமல் காங்கிரஸ் இடைக்கால அரசை அமைத்தது.
- 1946ல் ஆண்டு அக்டோபர் 25ம் நாள் முஸ்லீம் லீக் இடைக்கால அரசில் சேர்ந்தது.

**நேரடி நடவடிக்கை நாள் (16 ஆகஸ்ட் 1946)**

- இடைக்கால அரசில் சேரமறுத்த லீக் 1946ம் ஆண்டு ஆகஸ்ட் 16ம் நாள் - ஐ நேரடி நடைவடிக்கை நாளாக மற்றும் கருப்பு தினமாக கொண்டாட கேட்டுக் கொண்டார். ஆங்கில அரசுக்கெதிராக தொடுக்கப்பட்ட நடவடிக்கை இந்துக்களுக்கு எதிராக புனித போராக மாறியது.

**இடைக்கால அரசு மற்றும் நேரடி நடவடிக்கை நாள்**

- 1946ம் ஆண்டு வேவல் பிரபு நேருவின் தலைமையில் அமைச்சரவை (இடைக்கால அரசு) அமைக்குமாறு அழைப்பு விடுத்ததின்பேரில் மந்திரி சபை அமைக்கப்பட்டது.

DISTRICT EMPLOYMENT OFFICE VILLUPURAM



Downloaded from https://t.me/tnpscfree

- இந்த இடைக்கால அரசை எதிர்த்து முஸ்லீம் லீக் ஜின்னாவின் தலைமையில் ஆகஸ்டு 16ம் நாளை நேரடி நடவடிக்கை நாள் என நாடு முழுவதும் கிளர்ச்சி செய்தது.
- இதனால் இந்து முஸ்லீம் கலவரம் ஏற்பட்டது.
- தலைவர்கள் இந்தியாவைப் பிரிப்பதுதான் ஒரு வழி என முடிவு எடுத்தனர்.

**பம்பாய் கலவரம்**

- 1946ல் பம்பாய் கடற்படையில் கலவரம் ஏற்பட்டது.

**மவுண்ட்பேட்டன் திட்டம்**

- இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்பட வழியில்லை என்பதை புரிந்து கொண்ட மவுண்ட் பேட்டன் இந்தியாவை இந்தியா பாகிஸ்தான் என பிரிப்பது. வங்காளம், பஞ்சாப், போன்ற எல்லைகளை நிர்ணயித்தல் போன்றவை தொடர்பாக 1947 ஜுன் 3ம் நாள் தன் திட்டத்தை வெளியிட்டார்.
- இது மவுண்ட் பேட்டன் திட்டமாகும்.
- காந்தியடிகள் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை.
- பிரிட்டிஷ் பாராளுமன்றம் இதனை ஜுலை 18, 1947 அன்று நிறைவேற்றியது.
- இதன்படி சுதந்திரம் என நிர்ணயிக்கப்பட்டு சுதந்திரம் வழங்கப்பட்டது.

**இடைக்கால இந்தியாவின் அமைச்சரவை**

| | |
|---|---|
| ஜவர்கர்லால் நேரு | பிரதம அமைச்சர், வெளி விவகாரம் மற்றும் கர்மன் வெல்த் நாடுகளின் உறவுகள் மற்றும் அறிவியல்-ஆய்வு |
| சர்தார் வல்லபாய் படேல் | உள்துறை, செய்தி மற்றும் ஒளிபரப்பு மற்றும் மாநிலங்கள் |
| டாக்டர் இராசேந்திர பிரசாத் | உணவு மற்றும் வேளாண்மை |
| மௌலானா அபுல் கலாம் ஆசாத் | கல்வி |
| டாக்டர் ஜான் மத்தாய் | இரயில்வே மற்றும் போக்குவரத்து |
| சர்தார் பல்தேவ் சிங் | ராணுவம் |
| சகசீவன்ராம் | தொழில் |
| சி.எச். பாபா | வணிகம் |
| ரபி அகமது கித்வாய் | தொடர்புகள் |
| ராஜ்குமாரி அமிரித் கவுல் | சுகாதாரம் |
| டாக்டர் பி.ஆர்.அம்பேத்கார் | சட்டம் |
| ஆர்.கே.சண்முகம் செட்டியார் | நிதி |
| டாக்டர் சியாம் பிரசாத் முகர்ஜி | தொழில் மற்றும் விநியோகம் |
| என்.வி. காட்கில் | சுரங்கம் மற்றும் சக்தி |

- **இந்தியாவில் 565சுதேச அரசுகள் இருந்தன**
- அத்தகைய அரசுகளை இந்தியாவுடன் இணைக்கும் பணியை சர்தார் வல்லபாய் பட்டேல் நிறைவேற்றினார்.
- சர்தார் வல்லபாய் பட்டேலுக்கு இரும்பு மனிதர் என்று பெயர்.
- சர்தார் முயற்சியால் 552 சமஸ்தானங்கள் இணைந்தன.
- தாமாக முன்வந்து இந்தியாவுடன் இணைய தெரிவித்த அரசுகள் பாட்டியாலா, குவாலியர், பரோடா.
- இந்தியாவுடன் இணைய மறுத்த சமஸ்தானங்கள் - ஹைதராபாத், ஜீனாகாத், காஷ்மீர், திருவிராங்கூர் இவைகளை இணைத்த பெருமை படேலைச் சாரும்.

DISTRICT EMPLOYMENT OFFICE VILLUPURAM



Downloaded from https://t.me/tnpscfree

- ஜீனாகாத் என்று சிற்றரசு மன்னர் இந்தியாவுடன் சேர மறுத்தார். ஆனால் மக்கள் இந்தியாவுடன் சேர கிளர்ச்சி செய்தனர். எனவே 1948ல் வாக்கு கணிப்பு நடத்தி சேர்க்கப்பட்டது.
- ஹைதராபாத் - நிஜாம் இந்திய யூனியனுடன் சேர மறுத்தார். எனவே ஜெனரல் சௌத் தலைமையில் ஒரு படையை படேல் அனுப்பினார். 3 நாட்களில் நிஜாம் காசிம் ரஸ்வி பணிந்தார். 1948 செப்டம்பரில் இராணுவ நடவடிக்கை மூலம் இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்டது.
- காஷ்மீர் - காஷ்மீரை பாகிஸ்தான் தன் வசப்படுத்த விரும்பியது. ஆனால் காஷ்மீர் மன்னர் இந்தியாவுடன் இணைய விரும்பினார். அதன் படி இணைக்கப்பட்டது. (பாகிஸ்தான் வசமுள்ளது ஆசாத் காஷ்மீர் எனப்படுகிறது)
- காரைக்கால், பாண்டிச்சேரி, மாஹி, ஏனாம், சந்திரநாகூர் போன்ற பகுதிகளில் பிரெஞ்சுக்காரர்கள் வசமிருந்தன. இப்பகுதிகள் 1954 ஆம் ஆண்டு இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்டன.
- கோவா, டையூ, டாமன் ஆகிய பகுதிகள் போர்த்துகீசியர் வசமிருந்த நாடுகளாகும்.
- பிரான்சு அரசைப் போன்று போர்த்துகீசிய இருந்த காலத்தில் இந்திய படை இப்பகுதிகளை கைப்பற்றியது.
- சர்தார் வல்லபாய் படேல் இந்தியாவின் பிஸ்மார்க் எனப்போற்றப்படுகின்றார்.

DISTRICT EMPLOYMENT OFFICE VILLUPURAM

# MODERN INDIA

## BOOKS, JOURNALS & NEWS PAPERS

- Annie Beasant – New India and Commonweal
- Bipin Chndra Pal – New India
- Bankim Chandra Chatterji – Annanda Math
- Dange – The Socialist, Gandhi versus Lenin
- Dadabhai Naoroji – Poverty and Un – British Rule in India
- Din Bhandhu Mitra – Neel Darpan
- Evr Naicker Periyar – Kudi Arasu
- Jawahar Lal Nehru – Soviet Russia, Wheither India, Discovery of India
- Jyotibhai Phule – Ghulam Gri
- J.P. Narayan – To all Fighters of freedom, why Socialism
- Khan Abdul Gafar Khan – Pakhtun
- K Ramakrishna Pillai – Swadeshabhimani
- Lala harkrishna Lal – Traibune.
- Lala Lajpat Rai – The People, The Punjabi, Bande Mataram, Young India, Unhappy India
- Gandhi – Hind Swaraj, My Experiments with Truth. The Harijan
- G.G. Agarkar – Co – edited with Tilak the Kesary and Maratha, and Edit Sudharak
- Gulam Husain – Inquilab
- Hunter – Indian Mussalmaris
- M.N.Roy & Ambani Mukharjee – India Transition
- Madame Cama – Bande Matharam (Paris)
- Rabindra Nath Tagore – Gare, Ghari Baire letters from Russia
- R.C Dutta – Peasantry of Bengal, Economic History of India
- R.P. Dutta – India Today
- Sachin Sanyal – Bandi Jiban



Downloaded from https://t.me/tnpscfree

- Surendra Nath Banerji – Bengali
- Shyamji Krishna Verma Indian Socialogist.
- Subhas Chandra Bose – The Indian Struggle
- Sigaravelu – Labour Kisan Gazetter
- Vivekananda – Karamyoga, Rajyoga, Bhakti Yoga
- W.C.Banerjee – Indian Politics.

**BOOK/JOURNAL AND THEIR AUTHORS**

- Hindi Swaraj (Mahathma Gandhi)
- My Experience with Truth (Mahathma Gandhi)
- Discovery of India (J.L. Nehru)
- Gulam Giri (Jotiba Phule)
- Poverty and Un – British rule in India (Dadabhai Nauroji)
- Ganadevata (Tarashankar Bandhopadgya)
- Neel Darpan (Din Bandhu Mitra)
- India Wins Freedom (Maulana Azad)
- Anand Math (Bankim Chandra Chatterjee)
- Patha Panchali (Bibhuti bhushan Bandopadhay)
- A night of eternal gloom of India (Nabin Chandra Sen)
- Som Prakash (Ishwar Chandra vidhya Sagar)
- Tazib – Al – akhlaq (Sayyid Ahmad Khan)
- Indian Unrest (Valientine Chirol)
- Ghare Bhaire(Rabindra Nath Tagore)
- Kudi Arasu (E.V.R. Naicker)
- The Indian Struggle (Subhas Chandra Bose)
- Saraswathi Chandra (Goverthan Rani)
- Why I am an Athiest (Bhagata Singh)
- Indu Lekha (Chander Monon)
- Tamil chatholicism (Viraghavacharya)
- Indian National Evolution (Ambika Charan Majumdar)
- Bandi Jivan (Saraswati Chandra)
- Vanguard of Indian Independence (M.N. Roy)
- Goverdan Ram (Saraswati Chandra)
- Henry Cotton (New India)

**ONGRESS PRESIDENTS**

- 1885- Bombay – W.C.Bannerji
- 1886- Culcatta – Dadabhai Naoroji (first parsi)
- 1887-Madras-Syed Badruddin Tyabji (hrst muslim)
- 1888-Allahabad-George Yule (first Europian)
- 1889-Bombay – Sri William Weduerburn
- 1890- Culcatta – Sir Phirozedshah Metta
- 1891- Nagpu – Ananda Chrlu
- 1892-Allahabad-W.C.Banerji
- 1893-Lahore Dadabhai Naoroji
- 1894-Madras – A. Webb

DISTRICT EMPLOYMENT OFFICE VILLUPURAM



Downloaded from https://t.me/tnpscfree

- 1895-Poona – Surrederanath Banerji
- 1896-Calcatta – M. Rahimtullah Sayani
- 1897-Amroati-G.Sankaran Nair
- 1898-Madras-Ananda Mohan Bose
- 1899-Lacknow-Ramachandra Dutt
- 1900-Lahore- N.G.Chandravarkar
- 1901-Calcatta – E.D.Wacha
- 1902-Ahmedabad-Surendaranath Bannerji
- 1903-Madras – Lalmohan Bose
- 1904-Bombay – Sir Henry Cotton
- 1905-Benares – G.K.Gokhale
- 1906-Calcutta – Dadabhai Naoroji
- 1907-Surat-Rashbehari Ghosh (broken up)
- 1916-Lucknow – A.C.Majumdar
- 1917-Calcutta – Mrs.Annie Besant
- 1920-Calcutta(Special)- Lala Lajpati Rai
- 1924-Belgaon – M.K.Gandhi
- 1925-Kanpur-Mrs.Sarojini Naidu
- 1927-Madras – M.A. Ansari
- 1933-Calcutta – Mrs. Nellie Sengupta
- 1936-Lucknow – Pt.Jawaharlrl Nehru
- 1937-Faizpur-Pt. Jawaharlrl Nehru
- 1938-Hari Pura – Subhash Chandra Bose
- 1939-Tripuri – Subhash Chandra Bose
- 1947-Kiripalani

DISTRICT EMPLOYMENT OFFICE VILLUPURAM

## CONSTITUTIONAL DEVELOPMENTS

- **Regulating Act (1773):**
  - Subjected the Company's actions to the supervision of the British Governments of Bengal to be carried on by a Governor – General (President) and his council (4members); establishment of a Supreme Court at Culcutta.

- **Pitt's India Act (1784)**
  - A Board of Control, including two Cabinet Ministers, to guide and supervise the affairs of the Company of India; three members in Governor – General's Council; Madras and Bombay were Subordinated to the Governor – General and his council of Bengal in matters of diplpmacy were and revenue; commander – in – chief as one of the three members of the council.

- **Charter Act of 1813**

  - Company deprived of its trade monopoly in India except in tea and trade monopoly in India except in tea and trade with China; a sum of Rs. 1 lakh annually for education.



Downloaded from https://t.me/tnpscfree

❖ **Charter Act of 1833**

- End of Company monopoly on China Trade and tea trade Governor – General of Bengal of Governor-General of India; Governments of Madras and Bombay deprived of legislative powers; a fourth member (Law Member) added to the Council; a law commission constitued.

❖ **Charter Act of 1853**

- Service were thrown open to competitive examinations, a commission under Macaulay appointed to enforce this; Legislative and Executive councils separated; Law Member made a full members and 6 new members added for legislative purpose.

❖ **Government of India Act, 1858:**

- Goverment of India passed from the Company to the Crown and Governed through Secretary of State of India and a Council of 15 members; Governor – General received the title of Viceroy.

❖ **Indian Councils Act. 1861**

- A fifth member added to the Viceroy's Executive Council; portfolio system introduced by Lord Canning; for legislation 6 to 12 additional members to be added to the Executive Council by Viceroy; legislative powers of Madras and Bombay restored by Governor – General's assent and made compulsory; Governor – General empowered to issue ordinances to be in force for not more than 6 months.

❖ **Indian Council Act, 1892:**

- The Act exclusively dealt with the Legislative Councils in India; additional members in Central Legislature to be from 10 to 16; two – fifth of total members to be non-official; council to have right to discuss budget and ask questions on matters of public importance; some members to be elected directly; Indian leaders like G.K.Gokhale, Asutosh mukherjee, Rash Behari Ghosh and S.N. Bannerjee found their way in Legislative Council.

❖ **Indian Councils Act, 1919 (Montague-Chemsford Reforms)**

- Number of Indians in Governor – General's Executive Council raised to 3 in a council of 8; division of subjects into central and Provincial lists, bicamercial legislature at the centre the council of state (Upper House) and Central Legislative Assembly (Lower House); members enjoyed freedom of speech; diarchy in provines subjects to be dealt with the Provincial government were divided into was heads; Reserved and Transferred; reserved subjects to be administered by Governor with Executive Council; transferred subjects to be

DISTRICT EMPLOYMENT OFFICE VILLUPURAM



Downloaded from https://t.me/tnpscfree

administered by Governor with ministers; at least 70% of the members of Provincial Councils to be directly elected; under the Meston Award, the Provincial Governments were required tomake certain contributions to be Government of India; first election under new Act in 1920; dyarchy continued from April 1921 to April 1937.

- **Government of India Act, 1935:**
  - Provided for an All India Federation comprising provisions and those Indian which might accede; diarchy for the Federal Executive; Federal Legislative to have two chambers Council of State and Federal Assembly; Coucil of State to be permanent body; provision of a Federal court; British Government to be sole authority to amend the Constitution; diarchy in the provinces abolihsed; the Federation as visualized in the Act never came into being; after the election of 1937 under this Act; Congress formed Government in 7 provinces.

**IMPORTANT COMMISSION /COMMITTEES**

DISTRICT EMPLOYMENT OFFICE VILLUPURAM

| | |
|---|---|
| Charles wood Despatch (1854) | Education |
| Hunter Commission (1882) | Education |
| Raleigh Commission | Education |
| Sadler Commission (1917) | Education |
| Hartog Commission (1929) | Education |
| Sargeant Plan (1944) | Education |
| Cockerell (1866) | Famine |
| Statchey (1880) | Famine |
| Lyall (1896) | Famine |
| Mac Donell | Famine |
| Atchison | Public Services |
| Islignto | Public Services |
| Lee Commission | Public Services |
| Hunter Commission (1919) | Punjab Disturbances |
| Rowlatt Commission (1909) | Sedition |
| Fraser Commission (1902) | Police |
| Peel Commission | Federal Structure |
| Linlithgow Commission (1928) | Agriculture |
| Whitely Commission (1929) | Labour |
| Sapru Commission (1935) | Delimination |
| Butler Commission (1927) | Indian States |
| Flood Commission (1940) | Tenancy of Bengal |
| Webley Commission | Interrogated Dadabhai |

## EUROPEAN TRADING COMPANY

**Chronological order of Europians coming to India**



Downloaded from https://t.me/tnpscfree

- Portuguese
- Dutch
- English
- Danes
- French

## PORTUGUESE SETTLEMENTS

- Cochin 1501
- Cannanore 1502
- Goa 1510
- Diu & Daman 1534
- Hugly (lost in 1632)
- Bombay (give to English 1662)

## DUTCH SETTLEMENTS

- Musolipatnam (1605)
- Pulicat (1610)

## ENGLISH SETTLEMENTS

- Surat (1608)
- Musolipatnam (1611)
- Pulicat (1620)
- Madras (1639)
- Sultanati, Calicut, Govindpur (1698)

## FRENCH SETTLEMENTS

- Surat (1668)
- Musolipatnam (1689)
- Pondichery (1673)

## IMPORTANT ORGANISATION & PARTIES

| Parties & Organisations | Founders, Year & Place |
|---|---|
| Muslim League | Agr Khan, the Nawab of Dacca and mohsin u Mulk (1906-Dacca) |
| Lok Seva Mandal | Lala Lajpat Rai, Punjab, |
| Independent Congress Party | Madan Mohan Malviya (1926) |
| Hindu Association | Annie Besant |
| Hindu Mahasabha | Founded in 1917, Revived by Madan Jana Singh Shyama Prasad Mukherjee. |

DISTRICT EMPLOYMENT OFFICE VILLUPURAM



Downloaded from https://t.me/tnpscfree


https://t.me/tnpscfree
Join Telegram
Channel :
@tnpscfree
https://t.me/sasiclasses